## பெரியாழ்வார் அருளிச் செய்த
# திருப்பல்லாண்டு

---

### திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழி தனியன்கள்

### நாதமுனிகள் அருளிச் செய்தது

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேத$_3$ாநஷேஷ$_2$ான்
நரபதிபரிக்லுப்தம் ஶுல்கமாத$_3$ாதுகாம: |
ஸ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ||

### பாண்டிய பட்டர் அருளிச் செய்தவை

மின்னார் தடமதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொருகால் *
சொன்னார் கழற் கமலம் சூடினோம் * - முன்னாள்
கிழியறுத்தான் என்றுரைத்தோம் * கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர் பிரான் வந்தான் என்று *
ஈண்டிய சங்கம் எடுத்தூத * - வேண்டிய
வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான் *
பாதங்கள் யாமுடைய பற்று

---

## பெரியாழ்வார் அருளிச் செய்த
# திருப்பல்லாண்டு[1]

1 * பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு *
பலகோடி நூறாயிரம்[2]
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! * உன்
சேவடி[3] செவ்வி திருக்காப்பு ** 1

2 * அடியோமோடும் நின்னோடும் * பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு *
வடிவாய் நின் வலமார்பினில் * வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு *
வடிவார்சோதி வலத்துறையும் * சுடராழியும் பல்லாண்டு *
படைபோர் புக்கு முழங்கும் * அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே 2

---

[1] இது நித்யாநுஸந்தாநம்
[2] நூறாயிரமும்
[3] செவ்வடி

3 வாழாட்பட்டு நின்றீர் உள்ளீரேல் * வந்து மண்ணும் மணமும் கொண்மின் *
கூழாட்பட்டு நின்றீர்களை * எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் **
ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள் * இராக்கதர் வாழ் * இலங்கை
பாழாளாகப் படை பொருதானுக்குப் * பல்லாண்டு கூறுதுமே 3

4 ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து * எங்கள் குழாம் புகுந்து *
கூடு மனமுடையீர்கள் வரம்பொழி * வந்தொல்லைக் கூடுமினோ **
நாடும் நகரமும் நன்கறிய * நமோ நாராயணாய என்று *
பாடு மனமுடைப் பத்தருள்ளீர்! * வந்து பல்லாண்டு கூறுமினே 4

5 அண்டக் குலத்துக்கு அதிபதியாகி * அசுரர் இராக்கதரை *
இண்டைக்[4] குலத்தை எடுத்துக் களைந்த * இருடீகேசன் தனக்கு **
தொண்டக் குலத்தில் உள்ளீர்! * வந்தடி தொழுது ஆயிர நாமம் சொல்லி *
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து * பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
என்மினே 5

6 எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் * ஏழ்படிகால் தொடங்கி *
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ** திருவோணத் திருவிழவில்
அந்தியம்போதில் அரி உருவாகி * அரியை அழித்தவனை *
பந்தனை தீரப் பல்லாண்டு * பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே 6

7 தீயில் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி * திகழ் திருச் சக்கரத்தின் *
கோயில் பொறியாலே ஒற்றுண்டு நின்று * குடிகுடி ஆட்செய்கின்றோம் **
மாயப் பொருபடை வாணனை * ஆயிரம் தோளும் பொழி குருதி
பாய * சுழற்றிய ஆழி வல்லானுக்குப் * பல்லாண்டு கூறுதுமே 7

8 நெய்யிடை[5] நல்லதோர் சோறும் * நியதமும் அத்தாணிச் சேவகமும் *
கையடைக்காயும் கழுத்துக்குப் பூணொடு * காதுக்குக் குண்டலமும் **
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து * என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல *
பையுடை நாகப் பகைக் கொடியானுக்குப் * பல்லாண்டு கூறுவனே 8

9 உடுத்துக் களைந்த நின் பீதக ஆடை * உடுத்துக் கலத்ததுண்டு *
தொடுத்த துழாய் மலர் சூடிக் களைந்தன * சூடும் இத்தொண்டர்களோம் **
விடுத்த திசைக் கருமம் திருத்தித் * திருவோணத் திருவிழவில் *
படுத்த பைந்நாகணைப் பள்ளி கொண்டானுக்குப் * பல்லாண்டு
கூறுதுமே 9

10 எந்நாள் எம்பெருமான் * உந்தனக்கு அடியோம் என்று எழுத்துப்பட்ட
அந்நாளே * அடியோங்கள் அடிக்குடில் * வீடு பெற்று உய்ந்தது காண் **
செந்நாள் தோற்றித் * திருமதுரையுள் சிலை குனித்து * ஐந்தலைய

[4] இண்டக்
[5] நெய்யெடை/நெய்யடை

பைந்நாகத்தலைப் பாய்ந்தவனே! * உன்னைப் பல்லாண்டு கூறுதுமே 10

11 * அல்வழக்கு ஒன்றும் இல்லா * அணிகோட்டியர் கோன் * அபிமானதுங்கன்
செல்வனைப் போலத் திருமாலே! * நானும் உனக்குப் பழவடியேன் **
நல்வகையால் நமோ நாராயணா என்று * நாமம் பல பரவி *
பல்வகையாலும் பவித்திரனே! * உன்னைப் பல்லாண்டு கூறுவனே 11

12 * பல்லாண்டென்று பவித்திரனைப் * பரமேட்டியை * சார்ங்கம் என்னும்
வில்லாண்டான் தன்னை * வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் **
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் * நமோ நாராயணாய என்று *
பல்லாண்டும் பரமாத்மனைச் * சூழ்ந்திருந்து ஏத்துவர் பல்லாண்டே 12

**அடிவரவு:** பல் அடி வாழ் ஏடு அண்டம் எந்தை தீ நெய் உடுத்து எந்நாள்
அல்வழக்கு பல்லாண்டு வண்ணம்

---

**பெரியாழ்வார் திருவடிகளே சரணம்**